**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**

**கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண்**

**அறிக்கை**

**(28.04.2021 முதல் 02..05.2021 )**

**அறிக்கைஎண் 034/2021** **தேதி.27.04.2021**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலானபகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 34°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செஆகவும்,கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 19°செ முதல் 24°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## கோயமுத்தூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

| கடந்தவாரவானிலை (23..04 .2021 முதல் 26 04.2021) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு - 02..05.2021- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **23/04** | **24/04** | **25/04** | **26/04** | **தேதி** | **நாள் - 1 28/04** | **நாள் - 2 29/04** | **நாள் - 3 30/04** | **நாள் - 4 01/05** | **நாள் - 5 02/05** |
| 1.0 | 0.8 | 5.9 | 0.0 | மழை (மி.மீ) | 6 | 6 | 5 | 2 | 1 |
| 36 | 35 | 36 | 36 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 35 | 35 |
| 25 | 25 | 25 | 25 | குறைந்த பட்ச வெப்நிலை (°செ) | 25 | 25 | 25 | 25 | 25 |
| 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| 81 | 76 | 73 | 73 | அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85 | 85 | 85 | 85 | 85 |
| 57 | 52 | 54 | 46 | குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 45 | 45 | 45 | 45 | 45 |
| 13 | 11 | 6 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 200 | 230 | 200 | 200 | காற்று வீசும் திசை | 230 | 230 | 230 | 230 | 230 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (28 04.2021 முதல் 02 05.2021 )**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 45 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் தென்மேற்கு திசையில் வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | மேற்கு மலைத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஆங்காங்கே இடி மின்னலுடன் கூடிய மழை பொழிய வாய்ப்புள்ளது. நீர்பாசனத்தை தள்ளிப்போடவும் மற்றும் கோடை உழவு செய்யவும்.<br>கோடை மழையனை நிலத்தடியில் சேமிக்கவும், பயிர் கழிவுகளை மறுசுழற்சி செய்யவும், அறுவடை செய்த மற்றும் தரிசு நிலங்களை சரிவிற்கு குறுக்காக மண்ணை புரட்டும் கலப்பை கொண்டு உழவு செய்யவும்.<br>வானம் மேகமூட்டத்துடன் மற்றும் இடி மின்னலுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கு அடியுரம் அளிப்பதை தவிர்க்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையில் சாறு உறுஞ்சும் பூச்சிகள் அடித்து செல்ல வாய்ப்புள்ளதால் பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக்க வேண்டாம். |
| கம்பு | விதைப்பு **மற்றும் இளம் பருவம்** | ஔபய்யும் மழையினை பயன்படுத்தி இறவை கம்பு மற்றும் பாடுவாசி விதைப்பினை தொடரவும். விதைகளை 2 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு கரைசல் கொண்டு கடினபடுத்தி (விதைகளை 16 மணி நேரம் ஊரவைத்து, 5 மணி நேரம் நிழலில் உலர்த்தவும்) விதைக்கவும்.<br>தொடர்ந்து மழை பொழிவதால் இறவை கம்பு பயிரில் அதிக களைகள் வர வாய்ப்புள்ளது. எனவே மழை இல்லாத தருணங்களில் களை எடுத்து, பயிர்களை களைத்து பயிர்களுக்கு இடையில் 15 செ.மீ இடைவெளி இருக்குமளவு பயிர்களின் எண்ணிக்கையை பராமரிக்கவும். |
| கரும்பு | வளர் பருவம். | மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் கரும்பு பயிர் சாயாமல் தவிர்க்க தோகை உரிக்க வேண்டும்.<br>தொடர் மழையின் காரணமாக கரும்பு பயிரில் இரும்பு சத்து குறைபாடு தென்படுகிறது. எனவே இதை நிவர்த்தி செய்ய மழை இல்லாத தருணங்களில் 1 சதவீதம் இரும்பு சல்பேட் கரைசலை 1 சதவீதம் யூரியா கரைசலுடன் சேர்த்து 15 நாட்கள் இடைவெளியில் குறைபாடு நிவர்த்தி ஆகும் வரை தெளிக்கவும்.<br>கடந்தவார மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி பின் பருவ கரும்பு சாகுபடியை தொடர்ந்து மேற்கொள்ளலாம். மேலும் நடவுக்கு முன்பு கருணைகளை 0.1 சதவீதம் கார்பன்டசிம் கரைசலில் 15 நிமிடங்கள் ஊறவைத்து பின்பு நடவு செய்யவும். |
| தென்னை | | தென்னை மரத்தின் பாத்திகளை களைக் கொத்து கொண்டு கிளறி விடுவதன் மூலம் மழை நீரை சேகரிக்கலாம்.<br>இலேசான தூறலே எதிர்பார்க்கப்படுவதால் மண்ணிண் ஈரத்தை பொறுத்து இறவை பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் குறிப்பாக தென்னை, வாழை போன்ற பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும். |
| மஞ்சள் | நடவு | நிலவும் வானிலையில் மஞ்சள் கிழங்கை நடவு செய்வதற்கு உழவு மேற்கொள்ளவும். ஒரு எக்டருக்கு 12.5 டன்கள் தொழு உரத்தை வயலில் இட்டு கடைசி உழவு மேற்கொள்ளவும். |
| கால்நடைகள் | | இடி மின்னல் எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாடடுக்கொட்டைகளில் மின்சாரத்தை துண்டிப்பதன் மூலம் தீ பிடிக்காமல் பாதுகாக்கலாம். மேலும ்மாடு, ஆடு மற்றும் கோழி தீவனங்களை நனையாமல் பாதுகாக்கவும்.<br>கோடை காலங்களில் பெறப்படும் மழையுடன் இடியும் மின்னலும் சேர்ந்து வரக்கூடும். எனவே கால் நடைகளை மழை நேரங்களில் மேய்ச்சலுக்கு விடவேண்டாம்.<br>ஒரு சில இடங்களில் ஆடுகளில் துள்ளுமாறி நோய் காணப்படுகிறது. இதற்கு ஆடுகளை வெய்யில் வந்த பிறகு மேய விடவும். மேலும் அருகாமையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் தடுப்பூசி போட்டுக்கொள்ளவும். |

## குறுஞ்செய்தி

- கோடையில் பெய்யும் மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**

**முதன்மைஅலுவலர் (GKMS)**

**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**